www.Padasalai.Net

# தமிழ் - இரண்டாம் தாள்

பத்தாம் வகுப்பு

## பள்ளிக் கல்வித் துறை

## கிருஷ்ணகிரி மாவட்டம்

## பொதுத் தேர்வு சிறப்புக் கையேடு

## 2012-2013

வெளியீடு

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்

கிருஷ்ணகிரி

# தமிழ் இரண்டாம் தாள்

| வ.எண் | வினா வகை | மதிப்பெண் |
|---|---|---|
| 1 | ஒரு மதிப்பெண் வினாக்கள் | 17 |
| 2 | இரு மதிப்பெண் வினாக்கள் | 10 |
| 3 | ஐந்து மதிப்பபெண் வினாக்கள் | 10 |
| 4 | துணைப்பாடம் | 10 |
| 5 | பழமொழி ( 2X1) | 2 |
| 6 | பாநயம் பாராட்டல் | 5 |
| 7 | வங்கிப் படிவம் ( பணம் செலுத்துதல், எடுத்தல்) | 5 |
| 8 | கடிதம் | 10 |
| 9 | கட்டுரை | 10 |
| | மொத்தம் | 79 |

# தமிழ் இரண்டாம் தாள்

## பிரிவு — 1

I. ஒரு மதிப்பெண் வினா விடை : இலக்கணம்

1. "வளையல்" இச்சொல்லின் ஐகாரம் **ஒரு** மாத்திரை குறைந்து ஒலிக்கிறது.
2. குறுக்கங்கள் : ஐகாரக் குறுக்கம், ஔகாரக்குறுக்கம், **மகரக்குறுக்கம்,** ஆய்தக் குறுக்கம் என நால்வகைப்படும்.
3. ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் **திண்ணை** ஆகும்.
4. பல் தீது என்பது **பஃறீது** எனப் புணரும்.
5. 'வௌவ்வால்' - இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் **ஔகாரக்குறுக்கம்.**
6. பூங்குழலி பொம்மை செய்தாள் - இத்தொடரை செயப்பாட்டு வினையாக மாற்றும் போது, பொம்மை **பூங்குழலியால்** செய்யப்**பட்டது** என வரும்.
7. அழகன் பாடம் எழுதுகிறான் - இத்தொடரில், ஓர் எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்தால் **தனிநிலைத் தொடர்** ஆகும்.
8. அன்பரசன் திருக்குறளைக் கற்றான் - இத்தொடர் பிறவினையாக மாறும்போது, அன்பரசன் திருக்குறளைக் **கற்பித்தான்** என வரும்.
9. ஒருசொல் தனித்து நின்று பொருள் தருவது **தனிமொழி.**
10. தொழிலைக் குறிக்கும் சொல் **வினைச் சொல்.**
11. வினைமுற்று **தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று** என **இரு** வகைப்படும்.
12. ஓர் எச்சவினை **பெயரைக்** கொண்டு முடிந்தால் அது **பெயரெச்சம்** எனப்படும்.
13. இளவழகன் வந்தான். இது **வெளிப்படை தொடர்.**
14. மாடு என்னும் சொல் **அஃறிணைப் பொது பெயர்** ஆகும்.
15. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது **பசுவைக்** குறிக்கும் **(ஒன்றொழிப் பொதுச்சொல்).**
16. ஒரு பொருள் குறித்து வரும் சொற்களையே **ஒருபொருட்பன்மொழி** என்பர்.
17. ஒருபொருட்பன்மொழிக்குச் சான்று ஓங்கி உயர்ந்த மரம்.
18. "இது செய்வாயா?" என்னும் வினாவிற்கு வயிறு வலிக்கும் எனக் கூறுவது **உறுவது கூறல்** விடை ஆகும்.
19. "ஆடத் தெரியுமா?" என்னும் வினாவிற்குப் பாடத்தெரியும் எனக் கூறுவது **இனமொழி** விடை ஆகும்.
20. "நன்னூல் கிடைக்குமா?" எனக் கடைக்காரரிடம் கேட்பது **கொளல் வினா** ஆகும்.
21. வேய்புரை தோள் - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு **புரைய**
22. வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் வந்து சேரும்போது **நிலைமொழி ஈறும், மெய்யும் நீங்கும்.**
23. மேற்கு + நாடு என்பது **மேல்நாடு** எனச்சேரும்.
24. கருமை + குழி என்பது **ஈறுபோதல்,** இனமிகல் என்னும் விதிகளின்படி புணரும்.
25. மரவேர் என்பது **கெடுதல் விகாரம்** ஆகும்.
26. பொருளிலக்கணம் **அகம், புறம்** என இருவகைப்படும்.
27. குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்தும் **அன்பின் ஐந்திணைகள்** எனப்படும்.
28. நெய்தல் திணைக்குறிய நிலப்பகுதி **கடலும், கடல் சார்ந்த இடமும்** ஆகும்.
29. யாமம் என்பது இரவு 10 மணிமுதல் **காலை 2 மணி வரை** ஆகும்.
30. ஆறு பெரும் பொழுதுகளும் பெறும் திணைகள் **மருதம், நெய்தல்.**
31. திருமால் **முல்லை** நிலத்திற்குரிய தெய்வம்.
32. மணமுழா நெல்லரிகிணை ஆகிய இரண்டும் **மருதத்** திணைக்குரியது.

33. நண்பகல் என்பது **பாலை** திணைக்குரிய சிறுபொழுது.
34. அகத்திணைகள் **ஏழு** வகைப்படும்.
35. **மார்கழி, தை** ஆகிய இரண்டும் முன் பனிக்காலத்திற்குரியன.
36. மருத நிலத்திற்குரிய தெய்வம் **இந்திரன்.**
37. புறத்திணைகள் **பன்னிரண்டு** வகைப்படும்.
38. மண்ணாசை கருதி போருக்குச் செல்வது **வஞ்சித்திணை.**
39. பாடாண் திணை என்பது **ஆண்மகனின் ஒழுகலாறுகள்.**
40. ஒருதலைக்காமம் என்பது **கைக்கிளை.**
41. உலகு என்னும் சொல் வெண்பாவின் ஈற்றடியின் ஈற்றுச்சீராயின் அதன் வாய்பாடு **பிறப்பு** ஆகும்.
42. நல்லவை - இச்சொல்லை அலகிட்டால் **நேர் நிரை** எனப் பிரியும்.
43. ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் **ஏகாரத்தில்** முடிவது சிறப்பு.
44. நேரிசை வெண்பா இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று **முதல் இரண்டடி ஒரு** விகர்ப்பத்தானும், **கடைசி இரண்டடி ஒரு** விகர்ப்பத்தானும் வரும்.
45. வெண்பாவின் ஓசை **செப்பலோசை**
46. ஆசிரியப்பாவின் வேறு பெயர் **அகவற்பா.**
47. ஆசிரியப்பாவின் ஓசை **அகவலோசை.**
48. தொலைவில் வருவது எருதுவோ? பசுவோ? ஏன வினவுவது **ஐய வினா.**
49. எற்பாடு **எல் + பாடு** எனப்பிரியும்.
50. அதிரப்பொருவது **தும்பைத் திணை.**

II. பொருத்துக.

ஐ.

| | | |
|---|---|---|
| 1. ஐகாரக்குறுக்கம் | - | **ஐப்பசி, தலைவன், கடலை, வளை** |
| ஔகாரக்குறுக்கம் | - | **வௌவால், ஔவால், ஔவையார், ஔடதம்** |
| ஆய்தக் குறுக்கம் | - | **முஃடீது, பஃறீது, கஃறீது.** |
| மகரக்குறுக்கம் | - | **மருண்ம், போன்ம், தரும் வளவன், வரும் வண்டி** |
| 2. அடிஅகரம் ஐ ஆதல் | - | **பைங்கூழ்** |
| ஆதிநீடல் | - | **மூதூர்** |
| இனமிகல் | - | **கரும்பலகை** |
| தன்னொற்றிரட்டல் | - | **வெற்றிலை** |
| 3. குறிஞ்சி | - | **புலி, கரடி** |
| முல்லை | - | **முயல், மான்** |
| மருதம் | - | **எருமை, நீர்நாய்** |
| நெய்தல் | - | **முதலை, சுறா** |

III. தொடரை மாற்றி அமைத்தல்

வினாத்தொடராக மாற்றுக.

1. திருக்குறளை அனைவருமை் அறிவர்.
   **திருக்குறளை அறியாதவர் அனைவரும் அறிவரோ?**
2. காந்தியடிகளை அறியாதவர் எவரும் இலர்
   **காந்தியடிகளை அறியாதவரும் உளரோ?**

உணர்ச்சி தொடராக மாற்றுக.

1. இமயமலை மிகவும் உயரமானது
   **என்னே, இமயமலையின் உயரம் !**
2. கிளி கல்லால் அடிபட்டது.
   **அந்தோ, கிளி கல்லால் அடிபட்டு விட்டதே !**

சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.

1. திரைப்படம் மக்களை தன்பால் ஈர்த்துக் கட்டிப் போடவல்லது.
2. ஆண்களைப் போலவே பெண்களுக்கு அரசுப் பணி அனைத்துத் துறைகளிலும் கொடுக்கவேண்டும்.

ஊவம உருபை எடுத்து எழுதுக.

1. மான் அன்ன மருளும் பார்வை ___ **அன்ன**
2. வேய்புரை தோளுடைய வீரன் வந்தான் - **புரை**

| | | |
|---|---|---|
| தொகையுவமை | | |
| மதிமுகம் | - | மதி **போன்ற** முகம் |
| பவளவாய் | - | பவளம் **போன்ற** வாய் |
| கயல்விழி | - | கயல் **போன்ற** விழி |
| தேனமொழி | - | தேன் **போன்ற** மொழி |

| | | |
|---|---|---|
| உவமை | - | **உருவகம்** |
| மலர்ப்பாதம் | - | **பாரமலர்** |
| கயல்விழி | - | **விழிக்கயல்** |
| தேன்மொழி | - | **மொழித்தேன்** |
| முத்துப்பல் | - | **பல்முத்து** |
| மலரடி | - | **அடிமலர்** |

| | | |
|---|---|---|
| மரபுத்தொடர் | - | பொருள் |
| வாழையடி வாழையாக | - | **பரம்பரை பரம்பரையாக** |
| கொடிகட்டிப்பறந்தார் | - | **தனிப்புகழோடு விளங்கினார்** |
| முதலைக் கண்ணீர் | - | **பொய்யழுகை** |
| ஆயிரங்காலத்துப்பயிர் | - | **நீண்ட காலத்திற்குரியது.** |

பிரிவு ___ 2 (இரு மதிப்பெண் வினாக்கள்)

1. ஐகாரக்குறுக்கம்:
   ஐகாரம் தன்னுடைய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிப்பது.

| | | |
|---|---|---|
| எ.கா. ஐவர் | - | **$1\frac{1}{2}$ மாத்திரை** |
| வளையல் | - | **1 மாத்திரை** |
| பறவை | - | **1 மாத்திரை** |

2. மூவகை மொழிகள் யாவை?

| | | |
|---|---|---|
| தனிமொழி | - | **அறம்** |
| தொடர் மொழி | - | **அறம் செய்** |
| பொது மொழி | - | **தாமரை** |

3. பொதுமொழி என்றால் என்ன?
   ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், தொடர்ந்து நின்று வேறு பொருளையும் தருவது.
   எ.கா. **தாமரை** - மலர், **தா** + **மரை** - தாவுகின்ற மான்.
4. தெரிநிலை வினைமுற்று - விளக்குக.
   செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்ற ஆறனையும் தெரிவிப்பது, காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது. எ.கா. உழுதான்
5. முற்றெச்சம் என்றால் என்ன?
   ஒரு வினைமுற்று எச்சப்பொருளைத் தந்து, மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம். எ.கா. படித்தனன் தேறினன்.
6. அடுக்குத்தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாட்டை எழுதுக.

| அடுக்குத் தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|
| சொற்கள் தனியே நிற்கும் | ஒன்றுபட்டு நிற்கும் |
| பிரித்தால் பொருள் தரும் | பொருள் தராது |
| இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வரும் | இரட்டைச் சொல்லாகவே வரும் |
| எ.கா. வருக வருக | மட மட |

7. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
   வினா ஆறு வகைப்படும்.

1.அறிவினா
2.அறியா வினா
3. ஐயவினா
4.கொடை வினா
5.கொளல் வினா
6.ஏவல் வினா

8. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
   விடை எட்டு வகைப்படும்

1. சுட்டு விடை
2. நேர் விடை
3. மறை விடை
4. உற்றது உறைத்தல் விடை
5. உறுவது கூறல் விடை
6. வினா எதிர் வினாதல் விடை
7. இனமொழி விடை
8. ஏவல் விடை

9. அகத்திணைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
அகத்திணைகள் ஏழு வகைப்படும்.
1. குறிஞ்சி 2. முல்லை 3. மருதம் 4. நெய்தல் 5. பாலை 6. கைக்கிளை 7. பெருந்திணை

10. புறத்திணைகள் எத்தனை? அவை யாவை?
புறத்திணைகள் 12 வகைப்படும்
1. வெட்சி 2. கரந்தை 3. வஞ்சி 4. காஞ்சி 5.நொச்சி 6. உழிஞை 7. தும்பை 8. வாகை 9. பாடாண் 10. பொதுவியல 11. கைக்கிளை 12. பெருந்திணை

11. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
பா நான்கு வகைப்படும்
1. வெண்பா 2. ஆசிரியப்பா 3. கலிப்பா 4. வஞ்சிப்பா

12. வாகைத்திணை விளக்குக.
போரில் வெற்றி பெற்ற மன்னன் வகைப் பூ சூடி மகிழ்வது வாகைத் திணை.

பிரிவு ___ 3 (ஐந்து மதிப்பெண் வினாக்கள்)

அணி

1. தற்குறிப்பேற்ற அணி.
தன், குறிப்பு, ஏற்றம்
இயற்கையின் மீது கவிஞர் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது.
எ.கா. போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி வாரல் . . . .

விளக்கம்: கொடி காற்றில் அசைவது இயற்கை.அது கண்ணகி கோவலனை மதுரைக்குள் 'வராதே' எனக் கூறுவதாக இளங்கோவடிகள் தன் குறிப்பை ஏற்றிக் கூறியுள்ளார்.

2. வஞ்சப் புகழ்ச்சி அணி:
புகழ்வது போலப் பழித்தல்
பழிப்பது போலப் புகழ்தல்
எ.கா. தேவர் அனையர் கயவர் . . .

விளக்கம்: தேவரும், கயவரும் இணை எனப் புகழ்ந்து பின்னர் கயவர் தன் மனம் விரும்பியவாறு தீமையைச் செய்வர் எனப் பழித்துள்ளார் திருவள்ளுவர்.

3. சொற்பொருள் பின்வருநிலையணி:
செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது.
எ.கா. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.
விளக்கம்: விளக்கு ___ ஒளி என்ற ஒரே பொருளில் வந்துள்ளது.

அலகிட்டு வாய்பாடு கூறல்:

எளிய வழிகள்:

1. மெய்யெழுத்தின் பக்கத்தில் / குறியிடுக.
2. நேடில் எழுத்தின் பக்கத்தில் / குறியிடுக.
3. இரு குறில் அடுத்து / குறியிடுக.

4. ஒற்று (அ) ஆய்த எழுத்தை நீக்கி, ஓர் எழுத்து இருப்பின் 'நேர்' எனக் கொள்க.
5. இரண்டு எழுத்து இருப்பின் 'நிரை' எனக் கொள்க.

ஈரசைச்சீர் வாய்பாடு:

நேர் நேர் - தேமா

நிரை நேர் - புளிமா

நேர் நிரை - கூவிளம்

நிரை நிரை - கருவிளம்

ஈற்றுச்சீர்

நேர் - நாள்
நிரை - மலர்
நேர்பு - காசு
நிரைபு - பிறப்பு

பகுதி — 2 (துணைப்பாடம்)

1. பரிதிமாற் கலைஞர்
   - பரிதிமாற் கலைஞரின் இயற்பெயர் **சூரியநாராயண சாஸ்திரி**
   - தமிழார்வம் கொண்ட **இயற்றமிழ்** மாணவர்களுக்குத் தன் வீட்டிலேயே சுவைப்பட பாடம் கற்பித்தார்.
   - 1902 ல் பட்ட வகுப்பில் **தமிழை நீக்கும் முடிவு** இவரால் கைவிடப்பட்டது.
   - **மணிப்பிரவாள நடையை** எதிர்த்தார்.
   - **ரூபாவதி கலாவதி** என்னும் நாடகங்களை எழுதினார்.
2. எம்.ஜி.ஆர்.:
   - கோபால மேனன் - சத்தியபாமா தம்பதியினருக்கு 5வது மகனாக 14.01.1917 ல் இலங்கையிலுள்ள கண்டியில் எம்.ஜி.ஆர். பிறந்தார்.
   - சிறு வயதில் வறுமையின் காரணமாக மேடை நாடகங்களில் சிறுசிறு வேடங்களில் நடித்து, கடின உழைப்பினால் கதாநாயகனாக உயர்ந்தார்.
   - நடிப்பும் அரசியலும் இயரது இரு கண்கள்.
   - புரட்சி நடிகர், மக்கள் திலகம் என்று மக்களால் அழைக்கப்பட்டார்.
   - அண்ணாவின் இதயக்கனி ஆனார்.
   - சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.
   - பாரத் பட்டத்தையும் பாரதரத்னா விருதையும் பெற்றார்
   - 24.12.1987 அன்று மறைந்தார்.
3. குறட்டை ஒலி:
   - செல்வச் செழிப்பு மிகுந்த, கொடுக்க மனமற்ற, அரக்க மனம் படைத்த, குழந்தைகளற்ற கணவன் மனைவியர் வீட்டின் வடபகுதியில் குடியிருந்தனர்.
   - வறுமை வாட்டினாலும் இரக்கமனம் படைத்த கணவன் மனைவியர் , ஒரு பாட்டி, 7 குழந்தைகள், ஒரு நாய் என்று வாழ்ந்து வரும் குடும்பம் வீட்டின் தென் பகுதியில் குடியிருந்தனர்.
   - நாய் 5 குட்டிகளை ஈன்றது தாய் நாய் காணாமல் போகவே, குட்டிகள் பசியால் கத்தின. பால் வாங்கி ஊற்றவோ பணம் இல்லை.

- அரக்க மனம் கொண்டோர் நன்றாக உண்டு, குறட்டை விட்டு உறங்கிக் கொண்டிருந்தனர்.
- ஆனால் இரக்கமனம் கொண்ட தாயோ, தன் குழந்தைகயின் பாலையே பஞ்சில் நனைத்து குட்டிகளுக்கும் கொடுத்து அவற்றின் பசியை ஆற்றினாள்.

4. மெல்ல மெல்ல மற:
   - கமலநாதன் ஓயாமல் புகைபிடிப்பவன். கோகிலா அவன் மனைவி. அவள் எவ்வளவு எடுத்துக் கூறியும் கமலநாதன் திருந்தவில்லை.
   - கமலநாதனின் நண்பன் இராமலிங்கம் புகைபிடிக்கும் பழக்கத்தால் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்துவிடுகிறான்.
   - நண்பன் இராமலிங்கத்தின் மரணம் கமலநாதனைப் பெரிதும் பாதித்தது. இராமலிங்கத்தின் குடும்ப நிலை கமலநாதனை யோசிக்கச் செய்தது.
   - இப்போது, கமலநாதன் இனி புகை பிடிப்பதில்லை என்று முடிவு செய்து அதற்கான முயற்சியில் இறங்கினான்.
   - கோகிலாவும் அவனுக்கு உதவுவதாகக் கூறினாள்.

பகுதி - 3

ஆங்கிலப் பழமொழிக்கு இணையான தமிழ்ப் பழமொழிகள்:

1. Work is worship
2. There is no smoke without fire.
3. Health is wealth.
4. Diamonds cut diamonds
5. Empty vessels make the greatest sound.
6. Money makes many things
7. Knowledge is power.
8. Haste makes waste.
9. Time is gold.
10. Covert all lose all.
11. Failure is the stepping stone to success.
12. All that glitters is not gold.
13. Tit for Tat
14. Slow and steady wins the race
15. Barking dogs seldom bite.
16. Art is long and life is short.
17. All is well that ends well.
18. Live and let live.
19. Think everybody alike.
20. Lettle strokes fell greatoaks.

செய்யும் தொழிலே தெய்வம்

நெருப்பில்லாமல் புகையில்லை

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

முள்ளை முள்ளால் எடு.

குறைகுடம்